# கழுத்து நெரிக்கப்படல் சம்பவம் ஒன்றுக்குப் பின்பான பராமரிப்பு அறிவுறுத்தல்கள்

## Ontario Network of SA/DVTC

“திணறச் செய்தல்” அல்லது கழுத்து நெரிக்கப்படல் உள்ளடங்கலான தாக்குதல் ஒன்றுக்கான சிகிச்சையை வழங்குவதற்காக உங்களை இன்று பார்வையிட்டிருக்கிறோம். அவசரகாலநிலைச் சிகிச்சைப் பிரிவுக்குச் செல்வது எப்போது அவசியம் என்பதை அறிந்துகொள்வதற்கு இந்த அறிவுறுத்தல்கள் உங்களுக்கு உதவும்.

நீங்கள் வீட்டுக்குத் திரும்பிச்செல்லும்போது இந்த அறிவுறுத்தல்களை உங்களுக்கு நாங்கள் வழங்குகின்றோம்.

### கழுத்து நெரிக்கப்படல் என்றால் என்ன?

கழுத்து நெரிக்கப்படல், கழுத்து மற்றும் மூளையில் காயம்/வலி/நலமின்மையை ஏற்படுத்தலாம். ஒருவரின் கழுத்து நெரிக்கப்படும்போது, மூளைக்கான இரத்த ஓட்டத்தை அது பாதிக்கக்கூடும். அது மூளையின் ஆரோக்கியத்தையும் ஞாபகசக்தியையும் பாதிக்கலாம் என்பதுடன் ஏனைய உடல்ரீதியான மற்றும் மனநலரீதியான கரிசனைகளையும் ஏற்படுத்தலாம்.

### <u>வீட்டில் கவனிக்கப்படவேண்டியவை:</u>

உங்களின் நோய்க்குறிகள் தற்போது பாரதூரமற்றவையாக இருப்பதால், உங்களை நாங்கள் வீட்டுக்கு அனுப்புகின்றோம். கழுத்து நெரிக்கப்பட்ட இந்த அனுபவத்தின் பின்வரும் அடுத்த 24–72 மணித்தியாலங்களுக்கு, நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கும் ஒருவர் உங்களுடன்கூட இருப்பது பரிந்துரைக்கப்படுகின்றது.

கண்டல் காயங்களை அல்லது அசௌகரியத்தை நீங்கள் அவதானிக்கக்கூடும். முதல் இரண்டு நாட்களுக்கும், இரண்டு முதல் மூன்று மணி நேரத்துக்கு ஒரு முறை பனிக்கட்டியை (ice) 15-20 நிமிடங்களுக்குப் பயன்படுத்துங்கள். வேதனையையும் வலியையும் குறைப்பதற்கு அது உதவலாம்.

**உங்களின் நோய்க்குறிகள் அடுத்த இரண்டு மணிநேரத்தில் அல்லது சில நாட்களுக்குள் மோசமடைவதற்கான சாத்தியம் இருக்கிறது. பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றை நீங்களோ அல்லது உங்களுக்கு ஆதரவுதருபவரோ அவதானித்தால், தயவுசெய்து உடனடியாக 911ஐ அழையுங்கள் அல்லது அருகிலுள்ள அவசரகாலநிலைச் சிகிச்சைப் பிரிவுக்குச் செல்லுங்கள்:**

- சுவாசிப்பதில் இருக்கும் சிரமம் மோசமடைதல் (படுத்திருக்கும்போது சுவாசிப்பதில் சிரமம், அசையாமல் இருக்கும்போது மூச்சுத்திணறல், நிலைத்திருக்கும் புதிய இருமல் அல்லது இருமும்போது இரத்தம் வரல்)
- அறிவில்லாமல் போதல் அல்லது “மயக்கமடைதல்”
- உங்களின் குரலில் ஏற்பட்ட மாற்றங்கள் மோசமடைதல் அல்லது பேச முடியாமலிருத்தல்
- விழுங்குதலில் உள்ள சிரமம் மோசமடைதல் அல்லது வீணீர் கட்டுப்பாடின்றி வடிதல்
- உங்களின் தொண்டை, கழுத்து அல்லது நாக்கில் வீக்கம் நிலைத்திருத்தல் அல்லது அவற்றில் இருக்கும் வீக்கம் மோசமடைதல்
- கழுத்து வலி அதிகரித்திருத்தல், மருந்துச்சீட்டு இல்லாமல் வாங்கக்கூடிய வலி நிவாரணிகளைப் பயன்படுத்தினாலும் அந்த வலி குறையாதிருத்தல்
- உடலின் ஏதாவது ஒரு பகுதியில் பலவீனம், உணர்வின்மை அல்லது கூச்ச உணர்வு
- நடக்கும் திறனில் மாற்றம்
- புதிய அல்லது மோசமாகிக் கொண்டிருக்கும் தலைவலி
- புதிய தலைச்சுற்று அல்லது கிறுதி
- பார்வை இழப்பு அல்லது தொடர்ந்து மங்கலான பார்வை
- உங்களின் முகத்தில், உங்களின் வாயில் அல்லது உங்களின் கண்ணில் சிறிய சிவப்பு அல்லது ஊதா நிறப் புள்ளிகள் (petechia)
- வலிப்பு

- குழப்பம், மருட்சி, உங்களுக்கு அல்லது மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் எண்ணங்கள் புதிதாகத் தோன்றல் அல்லது அந்த எண்ணங்கள் மோசமடைதல், அல்லது மிக அதிகமான களைப்பு/நித்திரைத் தியக்கம் போன்ற விழிப்புநிலையில் ஏற்படும் திடீர் மாற்றங்கள்
- கண் இமை அல்லது கண் இமைகள் வழமையைவிடப் பதிவாகக் காணப்படல்
- சிறுநீரை அல்லது மலத்தை உங்களால் கட்டுப்படுத்த முடியாமலிருத்தல்

**நீங்கள் கர்ப்பமாக இருந்தால்,** கழுத்தை நெரிக்கப்பட்டமை பற்றியும் பின்வரும் அறிகுறிகள் ஏதாவது இருப்பின் அது பற்றியும் உங்களின் ஆரோக்கியப் பராமரிப்பாளருக்கு (உ+ம்.: மருத்துவச்சி, மருத்துவர், நிபுணத்துவச் செவிலியர்) உடனடியாகத் தெரிவியுங்கள்:

- சிசுவின் இயக்கம் குறைந்திருத்தல்
- யோனியில் வெள்ளைபடல் அல்லது இரத்தப்போக்கு
- அடிவயிற்று வலி
- தசைச்சுருக்கங்கள் / தசைப்பிடிப்பு

இந்த Sexual Assault/Domestic Violence Treatment Centre (பாலியல் தாக்குதல்/குடும்ப வன்முறைக்கான சிகிச்சை மையம்) இல் நீங்கள் பெற்றுக்கொண்ட பராமரிப்புத் தொடர்பாக உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், தயவுசெய்து எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்.

எங்களை நீங்கள் அழைக்கக்கூடிய இலக்கம்:

__________________________________________________

(SA/DVTC தொலைபேசி இலக்கம்)

எங்களின் முகவரி: __________________________________________________

(மருத்துவமனையின் பெயர், முகவரி)